முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 10.02.2026.

<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>

<u>அசல் வழக்கு எண். 108/2023</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பானுமதி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | தசரதன் | வயது | : | 70 |
| ஊர் | : | கோவிலூர் | தொழில் | : | இல்லத்தரசி |

**<u>வா.சா. 1 (பானுமதி): குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் பிரமாண வாக்குமூலத்தில் கொடுக்கப்பட்டுள்ள சங்கதிகள் என்ன இருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கொரோனா வந்த காலத்தில் வீட்டிலேயேதான் இருந்து வந்தேன் என்றால் நான் செங்கல்பட்டு மருத்துவமனையில் 6 மாதமாக இருந்தேன். கொரோனா வந்து எவ்வளவு வருடங்கள் ஆகியிருக்கும் என்றால் சுமார் 6 வருடங்கள் ஆகியிருக்கும். நான் அப்போது மிகவும் கஷ்டத்தில் பணமில்லாமல் இருந்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணமானது யார் எழுதிக்கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள எஸ். பத்மாவதி, விஜயகுமார் ஆகியோர்களின் கையெழுத்தானது என்னுடைய முன்னிலையில் பெறப்படவில்லை என்றால் சரிதான். விஜயகுமார் என்பவர் தன்னுடைய வீட்டிற்கு எடுத்துக்கொண்டு தன்னுடைய மனைவியின் கையொப்பத்தை பெற்றுக்கொண்டார்.

2. வாசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தில் உள்ள சங்கதிகளை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விஜயகுமார் எனக்கு எழுதிக்கொண்டு வந்து கொடுத்தார். மேற்படி விஜயகுமார் என்பவர் சென்னையில் உள்ள என்னுடைய மகள்களுக்கு போன் மூலம் பணம் அனுப்பினார் என்றால் சரியல்ல. அவர் எந்த ஒரு பணமும் அனுப்பவில்லை. நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பாண்டு பெற்று என்னிடம் கடன் வாங்கினார். பாண்டு காலம் முடிவடைந்தது அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதி பதிலுரையில் தாக்கல்

செய்துள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கினை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றும் கடன் பெற்றதை ஏற்கனவே பைசல் செய்துவிட்டார் என்றும் ஆவணத்தை உருவாக்கி பொய்யாக வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது.**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI
Digitally signed by K NALEENI
Date: 2026.02.10 18:33:21 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு